# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்) அவர்கள் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**பைத்துல் ஃபுதூஹ் ,இலண்டன்.** **நாள்: 25.01.2008**

---

*எங்களுடைய இறைவா! அவர்களுக்கு உனது அடையாளங்களை எடுத்தோதி அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களை தூய்மைப்படுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அவர்களிடம் தோற்றுவிப்பாயாக! நிச்சயமாக நீயே வல்லோனும், ஞானமிக்கவனுமாவாய். (2:130)*

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக **யுஸக்கீஹிம்** - அவர்களை தூய்மைப்படுத்தும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே தோற்றுவிப்பாயாக என்று துஆ செய்துள்ளார்கள். இது வர வேண்டிய அந்த மகத்தான தூதர் தொடர்பாக அவரிடம் இருக்க வேண்டிய நான்காவது சிறப்புத் தன்மையாக இந்த துஆவில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இறைவனது திருப்தி கிடைக்கும் அளவிலுள்ள நற்செயல்களைச் செய்ய வைப்பதும் அது பற்றி மக்களுக்கு போதிப்பதும்தான் ஒவ்வொரு தூதரையும் அல்லாஹ் உலகிற்கு அனுப்புவதன் நோக்கமாகும். மேலும் அதன் மூலமாக தன்னை ஏற்றுக் கொண்டவர்களை அவர்கள் தூய்மைப்படுத்துகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறக்கப்பட்ட அந்த வேதநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகள் எவ்வளவு தெளிவானதாக இருக்கின்றதென்றால் இதற்கு முன்புள்ள மார்க்க கட்டளைகளில் அதைப் போன்ற கட்டளைகள் குறிப்பிடப்படவில்லை. அவர்கள் மீது இறங்கியுள்ள வேதத்திலுள்ள கட்டளைகள் எவ்வளவு ஞானம்நிறைந்ததாகஇருக்கின்றதென்றால்ஒவ்வொருகட்டளையும்ஆதாரத்துடன்விளக்கிக்கூறப்பட்டிருக்கிறது. அதன் ஞானம் விளக்கப்பட்டிருக்கின்றது. இந்த வேதத்திலுள்ள ஒவ்வொரு வசனமும் ஓர் அடையாளமாக திகழ்கின்றது. அதன் மூலமாக மக்கள் தூய்மையடையும் போது அதுவும் எந்த அளவு சிறப்பாக இருக்குமென்றால் அவ்விஷயத்தில்கூட சென்ற கால ஷரீஅத்துகள் (மார்க்கக் கட்டளைகள்) திருக்குர்ஆனுடன் போட்டி போட முடியாது.

இந்த திருக்குர்ஆனின் போதனைகள் மூலம் மக்களை தூய்மைப்படுத்தும் பணி கியாமத் நாள் வரை இருக்கும்.எல்லா காலங்களிலம் நிலவும் தீமைகளிலிருந்தும் மக்களை தூய்மைப்படுத்துவதற்கான போதனைகள் இந்த வேதநூலில் இருக்கின்றது.

அல்லாஹ் துஆவிலுள்ள இந்த சிறப்பான அம்சத்தையும் ஏற்றுக் கொண்டான். மேலும் யுஸக்கீஹிம் உங்களிடையே தோன்றியுள்ள அந்த மகத்தான தூதர் உங்களை தூய்மைப்படுத்துகின்றார் என்று அல்லாஹ் கூறியுள்ளான். உலகம் உள்ளவரை தேவையான அனைத்து விஷயங்களையும் இந்த மகத்தான வேதம் எடுத்துக் கூறியிருக்கும் போது தூய்மைப்படுத்துகின்ற விஷயத்தில் அது எவ்வாறு எதுவும் கூறாமல் இருக்க முடியும்? கியாமத் நாள் வரை ஒவ்வொரு நபரையும் தூய்மைப்படுத்தக்கூடியவர்களாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே இருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிப் பிடித்தவாறு அவர்கள் கொண்டு வந்துள்ள போதனைகளை ஏற்றுக் கொள்ளாத வரை இனி யாரும் எவரையும் தூய்மைப்படுத்த முடியாது.

தூய்மைப்படுத்துதல் என்ற விஷயத்தை விளக்கிக் கூறுவதற்கு முன்னர் தஸ்கியா என்று சொல் தொடர்பான அகராதி பொருள்களைக் கூறுகின்றேன். ஸக்கா என்பதன் ஒரு பொருள், வளர்ச்சியடையக் கூடிய ஒன்று என்பதாகும். இரண்டாவது பொருள், தூய்மைப்படுத்துதல் என்பதாகும். பிறகு வளர்ச்சி அடையக்கூடியது என்பதிலும் இரு வகைகள் உள்ளன. ஒன்று, தானாக வளர்ச்சி அடையக்கூடியது. மற்றொன்று வளர்ச்சி அடையும்படி செய்வது. அவ்வாறே தூய்மைப்படுத்துதலும் இரு வகைப்படும். ஒன்று வெளிப்படையான சுத்தம், தூய்மையையும் இந்த சொல் குறிக்கும். அவ்வாறே அகத்தூய்மையையும் இந்த சொல் குறிக்கும்.

இந்த சொற்பொருள்களின் அடிப்படையில் வரவேண்டிய அந்த மகத்தான தூதர் அவருக்கு கிடைத்துள்ள மகத்தான போதனைகள் மூலமாக மக்களது மூளையை மட்டும் தூய்மைப்படுத்தமாட்டார். மாறாக, அந்த போதனைகளிலுள்ள நுட்பமான ஞானங்களை எடுத்துக் கூறி அந்த மக்களது உள்ளங்களையும்

தூய்மைப்படுத்துவார் என்ற நுட்பமான விளக்கத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். இப்படிப்பட்ட தூய்மை கிடைத்ததன் காரணமாக மக்களது உள்ளங்கள் அல்லாஹ்வின் மீதுள்ள அன்பால் நிறைந்து விடும். எதுவரையென்றால் இறைபண்புகளை தங்களுக்குள் ஈர்த்துக் கொள்பவர்களாக அந்த மகத்தான தூதரை ஏற்றுக் கொள்பவர்கள் ஆகிவிடுவர். சாதாரண மனிதர்களாக அவர்கள் இருந்தாலும் இறைவனைக் காட்டுகின்ற கண்ணாடிகளாக அவர்கள் தென்படுவார்கள். அவர்களைப் பார்க்கின்ற ஒவ்வொருவரும் அவர்களிடமிருந்து நற்பலன்களை பெறுவார்கள். அவர்களிடமிருந்து இறைபண்புகள் வெளிப்படும். அவர்களை பார்த்ததுமே இவர்கள் அல்லாஹ்வுடன் ஒன்றியவர்கள் என்பதை பார்ப்பவர்கள் புரிந்து கொள்வார்கள். இவர்களை சந்திப்பவர்கள் தூயவர்களாகவும் அல்லாஹ்வின் தூய அடியார்களாகவும் இருப்பார்கள். எனவே, இப்படிப்பட்ட தூய்மையை பெறுவது நமது ஆசையாகவும் நோக்கமாகவும் இருக்க வேண்டும். இதற்காக நாம் தொடர்ந்து முயற்சி செய்துவர வேண்டும். அப்போதுதான் உண்மையாக நம்மைப் தூய்மைப்படுத்துகின்ற அந்த மகத்தான தூதர் கொண்டு வந்துள்ள போதனைகள் மூலம் உண்மையில் நாம் பலன்பெற முடியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய்மைப்படுத்தும் ஆற்றல் மூலமாக அவர்களிடமிருந்த அதே நிறத்தை நபித்தோழர்களிடமும் நம்மால் பார்க்க முடிகிறது. அதுவும்கூட ஒரு குறிப்பான அடையாளமாக இருக்கின்றது. அந்த காலத்தில் அரபு சமுதாயத்தில் அந்த மகத்தான தூதர் மூலம் ஏற்பட்ட மகத்தான புரட்சி ஒரு மகத்தான அற்புதமாக திகழ்கின்றது.

**இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அந்தமகத்தானதூதர்காட்டுமிராண்டிகளைமனிதர்களாக்கினார்கள்.பிறகுமனிதர்களைநல்லொழுக்கமுள்ள மனிதர்களாக்கினார்கள். பிறகு நல்லொழுக்கமுள்ள மனிதர்களை இறைவனுடன் தொடர்புள்ள மனிதர்களாக்கினார்கள். மேலும் அவர்களை இறை நிறத்தைப் பெற்றவர்களாக ஆக்கினார்கள்.

**தொடர்ந்து கூறுகின்றார்கள்:**

உலகம் மரணித்திருந்த சமயத்தில் அல்லாஹ் இந்த காத்தமுல் அன்பியா முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களை அனுப்பி இந்த உலகைப் புதிய நிலையில் உயிர்ப்பித்தான். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

***இல்லமு அன்னல்லாஹா யுஹ்யில் அர்ழ பஃத மவ்திஹா*** - இந்த விஷயத்தை கேளுங்கள்! பூமி மரணித்த பிறகு இறைவன் அதை உயிர்ப்பிக்கின்றான். (57:18) பிறகு இதற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தோழர்கள் ரலியல்லாஹு அன்ஹும் தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

***வ அய்யதஹும் பிரூஹின் மின்ஹு*** (58:23) - அதாவது பரிசுத்த ஆவி மூலமாக அவர்களுக்கு அவன் உதவி செய்தான்.

பரிசுத்த ஆவியின் உதவி என்பது மரணித்துப்போன உள்ளங்கள் உயிர் பெறுவதேயாகும். மேலும் பரிசுத்த ஆவியின் உதவி அவர்களை ஆன்மீக மரணத்திலிருந்தும் பாதுகாக்கின்றது. தூய ஆற்றல்களையும், தூய புலன்களையும், தூய அறிவையும் அது அவர்களுக்கு வழங்குகிறது. மேலும் அது அவர்களுக்கு உறுதியான அறிவை வழங்கி அதற்கான மறுக்க முடியாத சான்றுகளையும் தெளிவான ஆதாரங்களையும் வழங்கி அவர்களை இறைநெருக்கம் பெறத்தக்க வகையிலுள்ள உயர் தகுதி வரை கொண்டு சென்றுள்ளது.

இதுதான் தூய்மைப்படுத்துகின்ற அந்த தூதரின் மகத்தான தூய்மைப்படுத்தும் ஆற்றலாகும். மது குடிப்பது, விபச்சாரம் செய்வது, போதைப் பொருட்களை பயன்படுத்துவது, சூதாடுவது போன்ற தீமைகளில் மூழ்கியிருந்த மக்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மைப்படுத்தும் ஆற்றல்தான் சீர்திருத்தியது. அவர்களோ இதற்கு முன்னர் தங்கள் தந்தையர்களின் மனைவிமார்களையும்கூட அவர்கள் விட்ட சென்ற பொருள்களைப் பங்கிடுவது போன்று பங்கிட்டு வந்தார்கள். சிறு சிறு விஷயங்களுக்குக்கூட அவர்கள் கோபப்பட்டார்கள். அதன் காரணமாக கொலைகளை செய்தார்கள். இவ்வாறு பல வருடங்களாக நடந்தது. ஆனால், இவர்கள் இஸ்லாத்தின் மடியில் வந்து விழுந்த பிறகு மற்றவர்களை கொலை செய்த அவர்களே மற்றவர்களுக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணிக்கக் கூடியவர்களாக மாறி விட்டார்கள். வெறுப்பிலும், காழ்ப்புணர்ச்சியிலும் மூழ்கியிருந்த அவர்கள் பிறரை மன்னிக்கக் கூடியவர்களாக மாறி

விட்டார்கள். குடி போதையில் மூழ்கி மதுவை தண்ணீர் போல குடித்து வந்தவர்கள் மது தடை செய்யப்பட்டு விட்டது என்ற இறையறிவிப்பை கேட்டதும் தங்களது உதடுகளில் வைத்திருந்த மது கோப்பைகளை அவர்கள் உடைத்தெறிந்ததால் மதீனாவின் வீதிகளில் மது தண்ணீர் போல் ஓடியது. எவர்களது இரவும் பகலும் தீமைகளாலும் பாவங்களாலும் நிறைந்திருந்ததோ அவர்கள் தங்களது இரவையும் பகலையும் மார்க்கத்திற்கு தொண்டு செய்வதிலும் இறைவனை வணங்குவதிலும் கழித்தார்கள். சபைகளில் கேலி கிண்டல்களில் ஈடுபட்டு வந்தவர்கள் தனிமையில் இறைவன் முன்பு குனிந்து அவனிடம் மன்றாடுபவர்களாக மாறிவிட்டார்கள். இந்த தூய்மைப்படுத்தக்கூடிய மகத்தான தூதரின் தூய்மைப்படுத்தும் ஆற்றலிலிருந்தும் அந்த தூதரின் தூய போதனைகளிலிருந்தும் பலனடைந்ததன் காரணத்தாலேயே அவர்களிடம் இந்த மகத்தான புரட்சி ஏற்பட்டது. உணர்வுடனும் மனத்தூய்மையுடனும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற அவர்கள் முயற்சி செய்தார்கள். இதன் காரணமாக அவர்களது எண்ணங்களில் மகத்தான மாற்றம் ஏற்பட்டது. தீமைகளை தீமைகள் என்று அறிந்து கொள்ள முடியாத அந்த புலன்கள்தான் இப்போது நன்மைகளின் உயர்வான தகுதிகளை தேடியது. அறியாமையின் இருள்களில் மூழ்கியிருந்த அவர்கள் அறிவின் கருவூலங்களாக மாறிவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய நட்பின் விளைவாக தூய அறிவை உலகில் பரப்பக்கூடியவர்களாக அவர்கள் மாறி விட்டார்கள். இறைவன் மீதுள்ள அவர்களது நம்பிக்கையும் முழுமையடைந்தது. ஒளிமயமான அடையாளங்கள் மூலமாக அவர்கள் தங்கள் இறைவனை அடையாளங் கண்டுகொண்டார்கள். இவ்வாறு இறைவனின் மகத்தான தோற்றத்தை அவர்கள் கண்ட பிறகு அல்லாஹ் அவர்கள் தொடர்பாக, **வ அய்யதஹூம் பிரூஹின் மின்ஹு** - தனது வசனங்களை அருள்வதன் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் மூலமாகவும் அல்லாஹ் அவர்களுக்கு உதவி செய்தான் என்று கூறுகின்றான். (58:23)

ஸக்கா என்ற சொல்லின் அகராதிப் பொருளை நான் ஏற்கனவே விளக்கி இருந்தேன். அதற்கேற்ப **யுஸக்கீஹிம்** என்பதன் பொருள், அவர் அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவார். அதாவது, இந்த இறை வேதத்தின் வழக்கத்திற்கு மாற்றமான தாக்கத்தின் விளைவாக அதிகமானோர் இந்த மகத்தான தூதரை ஏற்றுக் கொள்வார்கள். பிறகு இந்த மகத்தான தூதர் கொண்டு வந்த மார்க்கமாகிய இஸ்லாம் எல்லா மார்க்கங்கள் மீது வெற்றி பெறுகின்ற அந்த காலமும் வந்து விடும். இவ்வாறு அந்த மக்களது எண்ணங்களிலும் செயல்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய புரட்சி ஒரே நாளில் ஏற்பட்டு விடவில்லை. மாறாக, முழு அரபு நாட்டிலும் இந்த போதனைகள் மூலம் சிறிது சிறிதாகத்தான் புரட்சி ஏற்பட்டது. மக்களது அறிவுக்கேற்ப இந்த மாற்றங்கள் அவர்களிடம் ஏற்பட்டது. ஆனால், சிலரைப் பற்றி அவர்களைத் தூய்மைப் படுத்துவது என்பது நடைபெறாத ஒன்று என்று இறைவனே கூறினான். மேலும், இப்படிப்பட்டவர்கள் இறை தண்டனைக்குரியவர்கள் என்றும் அல்லாஹ் கூறி விட்டான்.

மக்காவில் அதிகமாக எதிர்ப்பு ஏற்பட்ட சமயத்தில் அல்லாஹ் தனது உதவியின் வழிகளை மதினாவில் திறந்து விட்டான். சிறிது சிறிதாக முழு அரபு நாடும் இஸ்லாத்தைத் தழுவியது. ஒரு போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது சிறிய தகப்பனாரின் கல்லீரலை கடித்து மென்ற ஹிந்தா போன்றோர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தொடர்ந்து இறைவணக்கத்தில் ஈடுபடுபவர்களாக மாறி விட்டார்கள். இப்படிப்பட்ட சம்பவங்களை கேட்கின்ற போது இன்றும்கூட இறைவன் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவான் என்ற உறுதியில் நமது உள்ளங்கள் நிரம்பி விடுகின்றது. எனவே, இன்று சில தற்காலிக தடைகள் ஜமாஅத்திற்கு ஏற்படுகின்றதென்றால், அதன் காரணமாக நாம் அவநம்பிக்கை அடையத் தேவையில்லை. எதுவரை தூய்மைப்படுத்துகின்ற இந்த மகத்தான தூதரின் போதனைகளுடன் நமக்கு முன் சென்றவர்கள் ஒன்றி இருந்தார்களோ, அவர்கள் தூய்மையடைந்து கொண்டே இருந்தார்கள். இன்றும் அதுவரைகூட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணைந்துள்ள நமது பணி தூய்மைப்படுத்துகின்ற அந்த போதனைகளை முதலில் நாம் செயல்படுத்துவதேயாகும். அவ்வாறு செயல்பட்டால் பிறகு உலகம் எவ்வளவு கடுமையாக நம்மை எதிர்த்தாலும் இந்த மார்க்கம் இறுதியில் வெற்றி பெறும் என்ற இறைவனின் வாக்குறுதி ஒருபோதும் மாறாது.

பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக ஓர் சட்டம் இயற்றப்பட்ட பிறகு ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் ஏதாவது தடை ஏற்பட்டதா? தடை ஏற்படுவது ஒரு புறமிருக்கட்டும். எந்த அளவு வேகமாக ஜமாஅத் அங்கு வளர்ச்சியடைந்துள்ள தென்றால் இதற்கு முன்னர் அது பற்றி நாம் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது. எனவே, எந்தெந்த நாடுகளில் ஜமாஅத்திற்கு இன்று எதிர்ப்பு இருந்து வருகின்றதோ

அவர்களும் கவலையடைய வேண்டிய அவசியமில்லை. ஒரு வழி அடைக்கப்பட்டால் ஆயிரக்கணக்கான வழிகளை அல்லாஹ் திறந்து தருவான்.

முல்லாக்களின் வற்புறுத்தலின் காரணமாக இந்தோனேஷியாவில் அஹ்மதிகள் மீது அரசாங்கம் கடுமையை காட்டியுள்ளது. நமது நோக்கத்திற்கு முற்றிலும் மாற்றமாக இருக்கின்ற சில விஷயங்களை நம்மை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்கின்றது. எனவே, இந்தோனேஷியாவில் உள்ள அஹ்மதிகளிடம் நான் கூறிக்கொள்வது என்னவென்றால், அரசாங்கம் தனது கோழைத்தனத்தின் விளைவாக முல்லாக்களுக்கு பயந்து ஜமாஅத்திற்கு சில தடைகளை விதித்தால் தடை விதிக்கட்டும். அது நல்லது தான். அதன் காரணமாக தூய மக்களைக் கொண்ட ஜமாஅத் மேலும் தூய்மையடைந்து உலகத்திற்கு முன்பு தோற்றமளிக்கும். இதனால் ஜமாஅத்திற்கு எவ்வித இழப்பும் ஏற்படாது. நமது வழிகளில் ஏற்படும் ஒவ்வொரு தடையும் நம்மை உயர பறக்க வைப்பதற்கான கருவியாகத்தான் இருந்திருக்கின்றது என்பதற்கு இன்று வரையுள்ள ஜமாஅத்தின் வரலாறு சாட்சியாக இருக்கின்றது.

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் முன்னறிவிக்கப்பட்ட அந்த மஹ்தியும் மஸீஹும் ஆவார்கள். அவர்கள்தான் இருள் நிறைந்த இந்த காலகட்டத்தில் மக்களது உள்ளங்களை தூய்மைப்படுத்தி அவர்களுக்கு ஒளியை வழங்கக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதை நாங்கள் எங்களது முழுமையான அகப்பார்வையின் மூலம் அறிந்து இந்த உலகிற்கு அறிவிக்கின்றோம். அவர்களால்தான் இன்று உலக மக்களை அல்லாஹ்வை சந்திக்க வைக்க முடியும்.எனவே,ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழுமையான அடிமையாக அவர்கள் இருந்த காரணத்தால் அவர்கள் புதிய ஷரீஅத்தை கொண்டு வராத நபியாக இருக்கின்றார்கள். இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாராக இருக்கின்ற அவருடன் தொடர்பு கொள்வதன் மூலமாகவே உள்ளங்கள் தூய்மையடைய முடியும். இந்த ஜமாஅத்தே தனது எண்ணிக்கையிலும் அதிகரித்து நிற்கும். இதன் செல்வமும் அதிகரிக்கும். இவ்வாறு இவை அதிகரித்துள்ளன. இத்தகு வளர்ச்சியை உலகத்தின் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. ஏனென்றால், இந்த ஜமாஅத் உண்மையான முறையில் தூய்மைப்படுத்தக்கூடியவராக இருக்கின்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்தாக இருக்கின்றது. எனவே, எங்கெல்லாம் எதிர்ப்புகள் ஏற்பட்டுள்ளதோ அங்குள்ளவர்களிடம் நான் கூறுவது நீங்கள் உங்களது தைரியத்தை உயர்வான நிலையில் வைத்திருக்க வேண்டும். எந்தவொரு எதிர்ப்பின் விளைவாகவும் நீங்கள் அஞ்சுவதற்கு பகரமாக அதன் மூலம் உங்கள் உள்ளங்கள் தூய்மையடைவதற்கான ஒரு வழியாக நீங்கள் அதை ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும், தூய்மைப்படுத்துகின்ற அந்த மகத்தான தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளின்படி செயல்படுவதில் மேலும் முன்னேறிச் செல்லுங்கள். எந்த அளவு உள்ளங்கள் தூய்மையடைந்து கொண்டே செல்லுமோ அந்த அளவு பரிசுத்த ஆவியின் ஆதரவும் உதவியும் நமக்கு கிடைத்துக் கொண்டே இருக்கும். இன்ஷா அல்லாஹ். அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப நமது எண்ணிக்கையும் அதிகமாகிக் கொண்டேயிருக்கும்.

எனவே, முஸக்கி (தூய்மைப்படுத்தக்கூடியவர்) என்ற சொல்லின் பல்வேறு பொருள்களை சிந்தித்தவாறு அதற்கேற்ப செயல்படுவது ஒரு நம்பிக்கையாளரின் பணியாகும். அவ்வாறு செய்தால் உலக, மார்க்க முன்னேற்றங்களை நாம் பெற்றுக் கொண்டே செல்வோம்.

இது தொடர்பான திருக்குர்ஆனின் போதனைகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளையும் நாம் செயல்படுத்த வேண்டும். திருக்குர்ஆனை தினமும் ஓதுவதன் மூலமாகவும் அதன் போதனைகளை அறிந்து செயல்படுவதன் மூலமாகத்தான் நமது உள்ளங்கள் தூய்மையடைய முடியும். எனவே, உள்ளங்களை தூய்மைப்படுத்துவது தொடர்பாக திருக்குர்ஆன் தந்துள்ள கட்டளைகளில் சிலவற்றை நான் உங்கள் முன் வைக்கின்றேன்.

நான் கூற விரும்பும் முதலாவது விஷயம் என்னவென்றால் ஒரு சமுதாயத்தில் இருக்கின்ற செல்வந்தர்களின் செல்வத்தின் காரணமாக அவர்களுக்கு பெருமை ஏற்படுகின்றது. செல்வம் அதிகரிக்க அதிகரிக்க அத்துடன் பேராசையும் அதிகரிக்கின்றது. தங்களது சொந்த கருவூலங்களை நிரப்பிக் கொள்வதன் பக்கம் அதிகமாக அவர்கள் கவனம் செலுத்துகின்றார்கள். சில நேரங்களில் மற்றவர்களின் செல்வங்களை கொள்ளையடித்து அவர்கள் தங்கள் கருவூலங்களை நிரப்பிக் கொள்கின்றார்கள். சிறிய சிறிய சாக்குப்போக்குகளை கூறியவாறு ஏழைகளின் உரிமையை கொள்ளையடிக்க அவர்கள் முயற்சி

செய்கின்றார்கள். எவ்வாறு தங்களுக்கு கீழே பணிபுரிகின்றவர்களின் சம்பள பணத்தை சிறிது சிறிதாக பிடிக்கலாம் என்பதற்கு சாக்குப்போக்குகளை தேடுபவர்களை நான் பார்த்துள்ளேன். இஸ்லாம் இப்படிப்பட்ட விஷயங்களை வெறுக்கின்றது. மாறாக, இப்படிப்பட்ட விஷயங்கள் அநீதியாகும். அநீதி மிகப்பெரிய பாவமாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியதாக ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அநீதி இழைப்பதிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால், அநீதி கியாமத் நாளன்று இருள்களாக உங்கள் முன்னால் வரும். பேராசை, கருமித்தனம், வெறுப்புணர்வு ஆகியவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால், இவையே இதற்கு முன்னுள்ளவர்களை அழித்தவையாகும். மேலும் இவையே அவர்களை கொலை செய்யும்படி தூண்டியது. மேலும் இவையே மதிப்பளிக்கப்பட வேண்டியவற்றை அவர்கள் அவமதிக்கும்படி செய்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வறியவர்கள் யார்? என்று உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டார்கள். எவர்களிடம் எவ்வித செல்வமும் பொருளும் இல்லையோ அவர்கள்தான் வறியவர்கள் என்று நாங்கள் பதில் கூறினோம். இதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனது உம்மத்திலுள்ள வறியவர்கள் யாரென்றால் அவர்கள் கியாமத் நாளன்று தொழுகை,நோன்பு போன்ற நற்செயல்களுடன் வருவார்கள். ஆனால், அவர்கள் யாரையாவது ஏசியிருப்பார்கள். எவரையாவது பழித்துப் பேசியிருப்பார்கள். எவருடைய செல்வத்தையாவது விழுங்கியிருப்பார்கள். எவ்வித உரிமையும் இல்லாமல் பிறரைக் கொலை செய்திருப்பார்கள். அதனால் அநீதியிழைக்கப்பட்ட அவர்களுக்கு இவர்கள் செய்த இந்த நற்செயல்கள் கொடுக்கப்படும். அதாவது, இவர்கள் செய்த எல்லா இறைவணக்கங்களும் இவர்கள் யார் மீது அநீதி இழைத்துள்ளார்களோ அவர்களிடம் சென்று விடும். எதுவரையென்றால் அந்த அநீதி இழைக்கப்பட்டவர்களுக்குரிய உரிமைகள் இவர்கள் மூலமாக அவர்களைச் சென்றடைவதற்கு முன்னதாக இவர்கள் செய்துள்ள நன்மைகள் முடிந்து விட்டால் அதற்குரிய பாவச் சுமையும் அநீதி இழைத்த இவர்கள் மீதே போடப்படும். இவ்வாறு சுவர்க்கத்திற்குப் பதிலாக அவர்கள் நரகத்தில் போடப்படுவார்கள். உண்மையில் இப்படிப்பட்டவர்கள்தான் வறியவர்களாக இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்டவர்கள் இறைவணக்கங்களில் ஈடுபடுகின்றார்கள். எல்லாரையும் விட அதிகமாக சந்தாவும் கொடுப்பார்கள். ஆனால் மற்றவர்களின் உரிமைகளை பறிப்பவர்களாக நீங்கள் இருக்கின்றீர்கள். அப்படிப்பட்டவர்கள் அநியாயக் காரர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் அநீதி இழைத்ததன் காரணமாக இறைவன் முன்னால் செல்கின்ற சமயத்தில் வறியவர்களாக செல்வார்கள். எனவே தூய்மையடைவது என்பது வெளிப்படையான முறையில் தூய்மையாக இருப்பது என்பது மட்டுமல்ல. மாறாக, உள்ளங்களின் நிலைமையை தூய்மைப்படுத்துவதான் மிகவும் அவசியமானதாகும். இறைவணக்கங்களை நிறைவேற்றுவதுடன் இறைவனின் அடியார்களின் உரிமையை முழுமையாக நிறைவேற்றும்போதுதான் உள்ளங்கள் தூய்மையடையும்.

எனவே செல்வந்தர்கள் ஏழைகளின் உரிமைகளை செலுத்தியவாறு அவர்களுக்காக பொருள் தியாகம் செய்வது அவர்கள் தூய்மையை அடைவதற்கு காரணமாக அமையும். அல்லாஹ் இது தொடர்பாக திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

தூதரே! நீர் அவர்களை தூய்மைப்படுத்துவதற்காகவும், அவர்களின் முன்னேற்றத்தின் வழிவகைகளை மேற்கொள்வதற்காகவும் நீர் அவர்களின் செல்வங்களிலிருந்து சதகாவை (தானங்களை) பெற்றுக் கொள்வீராக. (9:103)

அதாவது இந்த சதகா நம்பிக்கையாளர்களின் செல்வத்தில் அருள் ஏற்படுவதற்கு காரணமாக இருக்கும். அவர்களுக்கும் அருள் கிடைப்பதற்கும் அது காரணமாக இருக்கும். தூய்மையான உள்ளத்துடன் இறைவனின் திருப்தியை பெறுவதற்காக அவர்கள் சதகாவை கொடுக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். செல்வந்தர்களிடமிருந்து பெறப்படும் இந்த செல்வம் சமுதாயத்தில் பலவீனமாக இருப்பவர்களுக்காக செலவிடப்படும். அது பலவீனமானவர்களின் செல்வம் அதிகரிப்பதற்கும் காரணமாக அமையலாம். அதனால் பல ஏழைகளின் நிலையையும் நல்ல நிலைமையாக மாறும்போது அவர்கள் தங்களது செல்வங்களை தூய்மையாக்குவதற்காக சதகா கொடுப்பவர்களாகவும் சந்தா கொடுப்பதில் முன்னேறுபவர்களாகவும் அவர்கள் ஆகி விடுவார்கள்.

சதகா கொடுப்பது, சந்தா கொடுப்பது பற்றிய கட்டளை மட்டும் திருக்குர்ஆனில் கூறப்படவில்லை.

மாறாக, இறைவழியில் கொடுக்கப்படும் அந்த செல்வங்கள் எந்த எந்த இடத்தில் செலவிடப்பட வேண்டும் என்பதையும் அது கூறியுள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

ஸக்காத் வறியவர்கள், ஏழைகள், அதனை ஒன்றுசேர்ப்பதற்கான ஏற்பாட்டை செய்பவர்கள், உள்ளங்கள் ஒன்றி ஆறுதல் பெறத் தகுதியுடையவர்கள், கைதிகள், கடன்பட்டவர்கள், அல்லாஹ்வின் வழியில் எவருக்காவது பொதுவாக செலவிடப்படுதல், வழிப்போக்கர்கள் ஆகியவர்களுக்கு மட்டுமே உரியனவாகும். இது அல்லாஹ்விடமிருந்து வந்த (கடமையாக்கப்பட்டுள்ள) கட்டளையாகும். மேலும் அல்லாஹ் நன்கு அறிபவனும் நுட்பமான ஞானமுள்ளவனுமாவான். (9:60)

இறையடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதில் இஸ்லாமிய அரசுக்கு இருக்கின்ற பொறுப்பு பற்றி இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் ஏழைகளுக்காக செலவு செய்யுங்கள் என்று கூறப்பட்டுள்ளது. எவர் மிகவும் அதிகமாக வறியவராக இருக்கின்றாரோ அல்லது நோயாளியாக இருக்கின்றாரோ அவர்களுக்காக செலவு செய்ய வேண்டும். பிறகு ஆதரவற்ற மிஸ்கீன்கள் இருக்கின்றார்கள். நன்றாக வேலை செய்வதற்கு அவர்கள் விருப்பம் உடையவர்களாக இருந்தாலும், முதலீடு செய்வதற்கான தொகை போதிய அளவு இல்லாததால் அந்த வேலையை செய்ய முடியாமல் அவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கு பொருளுதவி செய்தால் பல்வேறு தீமைகளிலிருந்தும் அவர்கள் விலகிவிடுவார்கள். தூய்மையான சமுதாயத்தின் ஒரு அங்கமாக அவர்கள் ஆகி விடுவார்கள்.

பிறகு இந்த ஸக்காத், ஸதகா ஆகியவற்றால் கிடைக்கும் பணத்திலிருந்து இந்த செல்வங்களை ஒன்று திரட்டுவதற்காக அரசாங்கத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கும் செலவு செய்வதற்கான கட்டளை இருக்கின்றது. பிறகு உள்ளங்கள் ஒன்றி ஆறுதல் பெறத் தகுதியுடையவர்களுக்கும் இந்த செல்வம் செலவிடப்பட வேண்டும். முந்தைய காலக்கட்டத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமிருந்தாலும் சில தடைகள் காரணமாக இஸ்லாத்தை ஏற்க முடியாத நிலையில் சில சமுதாய தடைகளில் சிக்கியிருப்பவர்களுக்கும் அவற்றிலிருந்து அவர்களை விடுவிப்பதற்காக இந்த செல்வத்திலிருந்தும் செலவிடப்பட்டிருக்கின்றது. அல்லது புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்கள் தங்கள் சமுதாயத்திலிருந்தும் துண்டிக்கப்பட்டு தனித்து விடப்பட்ட காரணத்தால் அவர்களுக்கு பொருளாதார சிக்கல்களும் அதனால் துன்பங்களும் ஏற்பட்டிருந்தால் அவர்களுக்காகவும் அவர்களது துன்பங்களை போக்குவதற்காக இந்த செல்வத்திலிருந்து செலவு செய்யப்பட்டது.

இதற்கு இஸ்லாம் ரொக்கமாக பணத்தைக் கொடுத்து மக்களை முஸ்லிம்களாக்குகின்றது என்பது பொருளல்ல. மாறாக எவர்கள் தவிர்க்க முடியாத நிலைமையில் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளார்களோ நாங்கள் இந்த துன்பத்திற்கு ஆளாகியிருக்கின்றோம். இந்த வகையில் எங்களுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எங்களை இதிலிருந்து விடுவித்தால் நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகின்றோம். அல்லது வேறு பல தடைகள் உள்ளன. அவற்றிலிருந்து நாங்கள் விடுதலை பெற விரும்புகின்றோம். எனவே, எங்களை இவற்றிலிருந்து விடுவிக்க உதவி செய்யுங்கள் என அவர்கள் தாமாகவே உதவி கேட்கும்போத அவர்களுக்கும் இந்த செல்வத்திலிருந்து செலவு செய்ய அனுமதி இருக்கின்றது. இன்றைய காலத்தில் இப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் தப்லீக் செய்வதற்கான வழிவகைகளை செய்வதும் அதில் அடங்கும். உள்ளங்கள் ஒன்றி ஆறுதல் பெறத் தகுதி உடையவர்கள் பட்டியலில் இவர்கள் அனைவரும் வந்து விடுவார்கள்.

பிறகு அடிமைகளை விடுதலை செய்வதற்காகவும் இந்த செல்வம் செலவிடப்பட வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. அந்த காலத்தில் அடிமைகளை வைக்கும் பழக்கம் இருந்தது. இன்று இப்படிப்பட்ட நிலை இல்லை. ஆனால், சில செல்வந்தர்கள் அல்லது ஜமீன்தார்கள் ஏழைகளுக்கு கடன் கொடுத்து விட்டு அவர்களை தங்கள் அடிமைகளாக ஆக்கியிருக்கின்ற துர்பாக்கிய நிலை இன்று இருப்பதை நாம் பார்க்கின்றோம். அந்த ஏழைகளால் அந்த கடனை திருப்பிக் கொடுக்கவும் முடியாது. அதனால் அந்த செல்வந்தர்களுக்கு வேலை செய்யும் அடிமைகளாக அந்த ஏழைகள் இருக்கின்ற அவல நிலைமையும் முடிவுக்கு வராது.

பாகிஸ்தானிலும் இப்படிப்பட்ட பழக்கம் இருந்து வருகிறது. இப்போது அதற்கு எதிராக ஓரளவு எதிர்ப்புக் குரல் கொடுப்பது ஆரம்பமாகியிருக்கின்றது. ஆனால், இப்படிப்பட்டவர்களை விடுதலை பெற வைப்பது அராசங்கத்தின் பணியாகும். முதலாளியாக இருக்கின்றவருக்கும் அவருக்குள்ள உரிமைகள்

கொடுக்கப்படாமல் இருக்கக் கூடாது. அவ்வாறே தொழிலாளிக்குரிய உரிமையும் கொடுக்கப்படாமல் இருக்கக் கூடாது. இதன் விளைவாக அவர்களை தூய்மைப்படுத்தக்கூடிய நிலை உருவாக வேண்டும். அதற்கு மாற்றமாக எதிர்நடவடிக்கை என்ற நிலையில் சமுதாயத்தில் குழப்பம் ஏற்படும் வகையில் அதன் விளைவுகள் இருக்கக் கூடாது.

பிறகு எவர்களுக்கு வியாபாரத்தில் இழப்பு ஏற்பட்டிருக்கின்றதோ அவர்களது இழப்பை ஈடு செய்யவும் இந்த செல்வத்தை செலவிடலாம். பிறகு அல்லாஹ்வின் வழியில் பொதுவாக வரும் செலவு களுக்காகவும் இந்த பணத்தை செலவிடலாம். இறைவன் கட்டளையிட்டுள்ள எல்லா நல்ல செயல்களுக்காகவும் இந்த பணத்தை செலவிடலாம். பிறகு வழிப்போக்கர்களில் சிலர் பணம் குறைவாக இருப்பதன் காரணமாக வழியில் பயணத்தை தொடர முடியாத நிலையில் இருந்தால் அவர்களுக்காகவும் இந்த பணம் செலவிடப்படலாம். அல்லது அறிவைத் தேடி பயணம் செய்பவர்களுக்கு செலவுக்காக போதிய அளவு பணம் இல்லையென்றால், அவர்களுக்காகவும் இந்த செல்வத்திலிருந்து செலவிடலாம். ஆக, இந்த எல்லா கட்டளைகளும் சமுதாயத்தை தூய்மைப்படுத்துவதற்காக இடப்பட்ட கட்டளையாக இருக்கின்றன. இஸ்லாமிய அரசாங்கங்கள் நல்லெண்ணத்துடன் இந்த கட்டளைகளைப் பேணி நடந்தால் பிறகு இஸ்லாத்தைப் பற்றியும் முஸ்லிம்கள் பற்றியும் எத்தகு அழகிய தோற்றம் உலகத்திற்கு தெரியவரும் என்றால் வேறு எந்தவொரு அமைப்பாலும் அதனுடன் போட்டிபோட முடியாது. இஸ்லாத்தின் மீது செய்யப்படும் எல்லா ஆட்சேபனைகளும் இதன் மூலமாக தானாகவே அழிந்து விடும். ஏனென்றால், எந்தவொரு மார்க்க போதனையும் இதனை எதிர்த்து நிற்க முடியாது. அவ்வாறே எந்தவொரு சமுதாய அமைப்பும் இத்துடன் போட்டிபோட முடியாது.

இஸ்லாமிய பொருளாதார அமைப்பு வட்டியிலிருந்தும் விலகியிருக்கக் கூடியதாக இருப்பதால் தேவை இல்லாத சுமை எவர் மீதும் இருக்காது. ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் தனக்குரிய வழிவகைகளின் எல்லைக்குள் இருந்தவாறு குறிப்பாக இதற்கேற்ப செயல்பட முயற்சி செய்கின்றது. நமது ஜமாஅத்திற்குள்ள வசதிகள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் இருப்பதால் பல விஷயங்களை செய்வதற்கு நாம் ஆசைப்பட்டாலும் அவற்றை நாம் செய்ய முடியவில்லை. ஆனால், அரசாங்கத்தின் அமைப்பு தனக்குள்ள வசதிகளை சரியாக பயன்படுத்தினால் இந்த பணிகளை அரசாங்கத்தால் செய்ய முடியும்.

பாகிஸ்தானிலுள்ள வசதிகளை அரசாங்கம் சரியாக பயன்படுத்தியிருந்தால் பாகிஸ்தானில் எந்த அளவு வசதிகள் உள்ளனவென்றால், அதன் காரணமாக அங்கு வறுமை பற்றிய பேச்சே எழக்கூடாது. எனவே, திருக்குர்ஆனின் போதனைகள் எவ்வளவு அழகான போதனைகள் என்றால் அது எல்லா வகையிலும் சமுதாயத்தை தூய்மைப்படுத்துகின்றது. இஸ்லாமிய அரசாங்கத்தின் கீழ் இருக்கும் முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதவர்களும்கூட மக்களை தூய்மைப்படுத்துவதை அடிப்படையாக கொண்டுள்ள இந்த போதனைகள் மூலம் பயன் பெறலாம்.

பிறகு ***தஸ்கியா*** (தூய்மைப்படுத்துதல்) என்பது வெளிப்படையான தூய்மையையும் குறிக்கும். அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

***இன்னல்லாஹா யுஹிப்புத் தவ்வாபீன வ யுஹிப்புல் முத்தஹ்ஹிரீன்*** - நிச்சயமாக மீண்டும் மீண்டும் தன் பக்கம் திரும்புபவர்களையும் (உள்ளும், புறமும்) தூய்மையாக இருப்பவர்களையும் அல்லாஹ் நேசிக்கின்றான். (2:223)

எனவே, தவ்பா செய்தவாறு அல்லாஹ்வின் முன்பு குனிவதும் தான் செய்த தவறுகளுக்காக வெட்கப்பட்டு இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்புக் கோருதல்) செய்வதும் உள்ளம் தூய்மையடைவதற்கு காரணமாக இருக்கின்றது.

இரண்டாவதாக, வெளிப்படையான தூய்மையையும் அல்லாஹ் விரும்புகின்றான். பற்களை தூய்மையாக வைத்திருப்பது, உடலையும் ஆடைகளையும் தூய்மையாக வைத்திருப்பது, சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பது தொடர்பாக குறிப்பான கட்டளை நமக்கு தரப்பட்டிருக்கின்றது. இறைவனை வணங்குவதற்குக்கூட வெளிப்படையான தூய்மையை அதாவது உளூ செய்வது அவசியமாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால், எந்த அளவு தூய்மை தொடர்பாக நமக்கு போதிக்கப்பட்டுள்ளதோ அந்த அளவு முஸ்லிம்களிடம் தூய்மையாக இருப்பதில் உயர்வான நிலையை நம்மால் பார்க்க முடியவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குறிப்பாக ஜுமுஆ நாளன்று குளிக்க வேண்டும் என்றும்

நறுமணம் பூசிக்கொள்ள வேண்டும் என்றும் கட்டளையிட்டுள்ளார்கள். பள்ளிவாசலுக்கு வரும்போது கெட்ட வாடை வரும் பொருள்களை சாப்பிடுவதிலிருந்தும் தடை செய்துள்ளார்கள். பிறகு சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற கட்டளை இருக்கின்றது. பாகிஸ்தான் போன்ற மற்ற ஏழை நாடுகளிலுள்ள மக்கள் ஏழ்மை இருந்தால் அத்துடன் கண்டிப்பாக அசுத்தமும் இருப்பது அவசியமாகும் என்ற எண்ணத்தில் இருக்கின்றார்கள். ஆனால், தான் வாழ்கின்ற பகுதியை தூய்மையாக வைப்பதற்கு ஏழ்மையுடனோ, செல்வ செழிப்புடனோ எவ்வித தொடர்பும் இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் **அத்தஹூரு ஸத்ருல் ஈமான்** - தூய்மையாக இருப்பது ஈமானின் ஒரு பகுதியாகும் என்று கூறியதாக ஹஸ்ரத் அபூமூஸா அஸ்அரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு நாள் பள்ளியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது பரட்டைத் தலையுடனும், சீர் செய்யப்படாமல் இருக்கும் தாடியுடனும் அலங்கோலமான நிலையில் ஒருவர் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சைகை மூலமாக உங்களது தலை முடியையும் தாடியிலுள்ள முடிகளையும் நேர்த்தியாக சீராக வையுங்கள் என்று அவரிடம் கூறி புரிய வைத்தார்கள். அவர் தனது தலை முடியை சீவி சரி செய்துவிட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்ததும் இந்த அழகான தோற்றம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கின்றதா அல்லது பார்ப்பதற்கு ஷய்த்தான் போன்றும் பூதம் போன்றும் இருப்பது நன்றாக இருக்கின்றதா? என்று அவர்கள் அந்த நபரிடம் கேட்டார்கள்.

இன்று சிலர் அல்லாஹ்வை அடைந்தவர்களின் ஆடையும் அழுக்காக இருக்க வேண்டும். வெளிப்படையான தோற்றமும் சீர்குலைந்து போய் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றார்கள். இந்த ஹதீஸ் அந்த கருத்தை மறுக்கின்றது. இங்கும் நான் பார்த்துள்ளேன். இங்குள்ளவர்களில் சிலரும் சில அஹ்மதிகளும் கூட நான் அவர்களை பார்க்கும்போது அவர்களது தலைமுடி அலங்கோலமாய் இருப்பதை நான் பார்த்துள்ளேன். பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்கள் இவ்வாறு இருப்பதை நான் பார்த்துள்ளேன். அவர்களைப் பார்க்கும் போது இப்போதுதான் தூக்கத்திலிருந்து எழுந்து வந்துள்ளார்கள் என்பது போல தெரியும். எனவே, சிறு வயதிலேயே அவர்களுக்கு இந்த விஷயங்கள் தொடர்பாக பயிற்சி அளிக்க வேண்டும். சரியான நேரத்தில் எழுந்து தயாராகி சரியான நேரத்தில் பள்ளிக்கூடம் செல்ல வேண்டும். தலை முடியை வார வேண்டும். முகம், கை, கால் ஆகியவற்றை கழுவ வேண்டும் என்பதை பெற்றோர்கள் அவர்களுக்குப் புரிய வைப்பதுடன் பெற்றோர்களும் தங்களை எப்போதும் தூய்மையாக வைத்திருப்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

எந்த நாடுகளில் வெப்பம் அதிகமாக இருப்பதன் காரணமாக அதிகமாக வியர்வை வருமோ அங்கு உடலை தூய்மையாக வைப்பதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். சில இடங்களில் தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கலாம். எவ்வாறிருப்பினும் ஒரு முறையாவது குளிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த விஷயங்கள் குறித்தே தூய்மை ஈமானின் ஒரு பகுதியாக இருக்கின்றது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

பிறகு உள்ளத்தை தூய்மைப்படுத்துவது தொடர்பாக நபித்தோழர்கள் எவ்வாறு செயல்பட்டார்கள்? தீமைகளை எவ்வாறு அழித்தார்கள்? என்பதைப் பற்றி நான் கூறியிருந்தேன். இப்போது சில தீமைகள் பற்றி குறிப்பாக கவனமூட்ட விரும்புகின்றேன். உள்ளத்தில் நன்மைகள் இருந்தும்கூட சில அஹ்மதிகளிடம் கூட இப்படிப்பட்ட தீமைகள் இருக்கின்றன. ஆனால், நன்மையும் தீமையும் ஒரு இடத்தில் ஒன்றுசேர முடியாது என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். தீமைகள் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தால் அவை நன்மைகளை அகற்றி விடும். எனவே, நன்மைகள் நமது உள்ளத்தில் வலுவாக பதிந்து விடுவதற்கு தீமைகளை உள்ளத்திலிருந்து நாம் வெளியேற்ற வேண்டும். பொறாமை, பொய் பேசுவது, கடன் வாங்கினால் திருப்பிக் கொடுக்காமல் இருப்பது போன்ற தீமைகளிலிருந்து நாம் வெளியேற வேண்டும். இன்றைய சமுதாயத்தில் இப்படிப்பட்ட விஷயங்கள் பல பிரச்சனைகளை உருவாக்கியிருக்கின்றது. எனவே, இத்தீமைகள் குறித்து விளக்குவது அவசியம் என்று கருதுகின்றேன்.

பொறாமையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு **வ மின் ஸர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்** என்ற துஆவை அல்லாஹ் கற்றுத் தந்துள்ளான். இதன் பொருள்: இறைவா! பொறாமைக்காரர்களின் பொறாமையிலிருந்து நீ எங்களை காப்பாற்றுவாயாக என்பதாகும். தூய உள்ளத்துடன் இவ்வாறு ஒரு மூமின் துஆ செய்கின்றபோது அவர் மற்றவர்கள் மீது பொறாமை கொள்வதிலிருந்தும் விலக முயற்சி செய்வார்.

**ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம்**

**(ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

பொறாமையிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால், நெருப்பு விறகையும் வைக்கோலையும் எரித்து விடுவது போல் பொறாமை நன்மைகளை அழித்து விடுகின்றது.

பொறாமையின் மூலமாக நன்மைகள் முற்றிலும் அழிந்து விடுகின்றன.

**ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

ஒருவர் மற்றவர் மீது காழ்ப்புணர்ச்சி கொள்ள வேண்டாம். பொறாமை கொள்ள வேண்டாம். உறவை முறித்துக் கொண்டு முகந்திருப்பி சென்றுவிட வேண்டாம். அல்லாஹ்வின் அடியார்களாகவும் சகோதரர்களாகவும் ஆகி விடுங்கள். தனது சகோதரனுடன் மூன்று நாட்களுக்கு மேல் வெறுப்புடன் இருப்பதும் அவருடன் உள்ள உறவை முறித்துக் கொள்வதும் எந்த ஒரு முஸ்லிமுக்கும் அனுமதிக்கப்பட்டதல்ல. இந்த விஷயங்கள்தான் உள்ளங்களில் தூய்மையை ஏற்படுத்த முடியும்.

வெளிப்படையில் மிக நல்லவர்களாக தெரிபவர்களிடம்கூட மற்றவர்கள் மீது பொறாமை கொள்கின்ற குணம் இருக்கின்றது. அந்த பொறாமையின் நெருப்பில் அவர்களும் எரிந்து மற்றவர்களுக்கும் துன்பம் கொடுக்க அவர்கள் முயற்சி செய்கின்றார்கள். பொறாமை கொள்வதிலும் பிறருக்கு இழப்பை ஏற்படுத்தி தந்திரமாக செயல்படுவது தொடர்பாக சிந்திப்பதிலும் எந்த அளவு அவர்கள் நேரத்தை செலவு செய்கின்றார்களோ அந்த அளவு அவர்கள் தங்கள் நேரத்தை ஆக்கப்பூர்வமான பணிகளை செய்வது தொடர்பாக சிந்திப்பதிலும் துஆக்கள் செய்வதிலும் கழித்தால் மற்றவர்களைவிட அல்லாஹ் அவர்களை விரைவாக முன்னேற்றமடையச் செய்வான்.

**இரண்டாவது தீமை** பொய் பேசுவதாகும். எல்லா விதமான தவறான பேச்சிலிருந்தும் நாம் விலகியிருக்க வேண்டும். அல்லாஹ்வின் கூற்றிற்கேற்ப பொய் பேசுவது ஒருவரை அல்லாஹ்வுக்கு இணை வைக்கும் செயலுக்கு அருகில் கொண்டு சென்று விடும். தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ள விரும்பும் நம்பிக்கையாளருக்கு இத்தகைய தீமையிலிருந்து விலகியிருப்பது மிகவும் அவசியமாகும்.

நீங்கள் உண்மையைக் கடைபிடித்து வாழுங்கள். ஏனென்றால், உண்மை நன்மையின் பக்கம் வழிகாட்டும். நன்மை சுவர்க்கத்திற்கு வழிகாட்டும். மனிதன் உண்மை பேசுவதுடன் உண்மைப் பேச முயற்சி செய்யும் வரை அல்லாஹ்வால் சித்தீக் (உண்மையாளர்) என எழுதப்படுகின்றான். நீங்கள் பொய் பேசுவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனென்றால், பொய் தீமையின் பக்கம் வழிகாட்டும். மேலும் தீமைகள் ஒருவரை நேராக நரகத்திற்குக் கொண்டு செல்கிறது. ஒருவர் பொய் பேசுகின்றார். பொய் கூறுவதை வழக்கமாக்கிக் கொள்கின்றார். எதுவரை என்றால் அல்லாஹ்விடத்தில் அவர் கஸ்ஸாப் - அதாவது பொய்யார் என்று எழுதப்படுகின்றார்.

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:**

பெரும் பாவங்கள் பற்றி நான் உங்களுக்கு கூறட்டுமா? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! கண்டிப்பாக கூறுங்கள் என்று நாங்கள் அவர்களிடம் கூறினோம். அதற்கு அவர்கள் அல்லாஹ்விற்கு இணை வைத்தலும் பெற்றோர்களுக்கு கீழ்படியாமல் இருப்பதும் பெரும் பாவங்களாகும் என்று கூறினார்கள். பிறகு தலையணையில் சாய்ந்து அமர்ந்திருந்த அவர்கள் மிகவும் உணர்வுடன் நிமிர்ந்து அமர்ந்தார்கள். பின்னர் மிகவும் உணர்வுடன் மூன்றாவது பெரிய பாவம் பொய் பேசுவதும் பொய் சாட்சி கூறுவதும் ஆகும் என்று கூறினார்கள். அவர்கள் இந்த விஷயத்தை எத்தனை முறை திரும்பத் திரும்ப கூறினார்கள் என்றால் அந்தோ! அவர்கள் அமைதியாக இருந்துவிட மாட்டார்களா? என்று நாங்கள் ஏங்கினோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தமது உம்மத்தைச் சார்ந்தவர்கள் ஒருபோதும் நெருப்பில் வீழ்பவர்களாக இருக்கக்கூடாது என்ற கவலை அவர்களுக்கு இருந்தது. இதன் காரணமாகவே இதனை கூறுகின்றபோது அவர்கள் அமைதியிழந்து காணப்பட்டார்கள். அல்லாஹ் இந்த சாபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! மேலும் உண்மையான முறையில் நமது உள்ளங்களை தூய்மைப்படுத்தக்கூடியவனாக அவன் நம்மை ஆக்குவானாக!

**மூன்றாவது விஷயம்,** கடன் வாங்கியவர் கடனை சரியான சமயத்தில் திருப்பிக் கொடுக்காமல்

இருக்கின்ற இந்த தீமையும் அதிகமாக இருந்து வருகிறது. மக்கள் தங்களது தேவைக்காக கடன் வாங்குகின்றார்கள். ஆனால் அதை திருப்பிக் கொடுக்காமல் பல சாக்குப்போக்குகளை கூறுபவர்களாக அவர்கள் இருக்கின்றார்கள். **கடன் வாங்குவதற்கு முன் எவரிடமிருந்து கடன் கேட்கப்படுகின்றதோ அவரை விட நல்ல மனிதர் வேறு எவருமேயில்லை. இந்த இந்த சிறப்பு அம்சங்கள் அவரிடம் இருக்கின்றது என்றெல்லாம் கடன் வாங்குபவர் அவரைப் பற்றி கூறுகின்றார். ஆனால் அந்த கடனை அவர் திருப்பிக் கேட்கும் போது அவரை விட தீயவர் வேறு எவருமில்லை என்று கூறப்படுகின்றது.** அவரை விட அநியாயக்காரர் வேறு எவருமில்லை என்று கூறப்படுகின்றது. ஒரு மூஃமினுக்கு இது அழகல்ல. தூய உள்ளம் வேண்டும் என்ற ஆசை உள்ளவர்கள் இவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்கள்.

ஒரு நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்துமாறு அவர் கேட்டார். மேலும் அவ்விஷயத்தில் அந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மிகவும் அவமரியாதையுடன் நடந்து கொண்டார். இதைப் பார்த்த நபித்தோழர்களுக்கு அதிகமாக கோபம் வந்தது. நபித்தோழர்கள் அந்த நபரை அதட்ட ஆரம்பித்தார்கள். இதனைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் எதுவும் கூற வேண்டாம். எவர் கடனை திரும்பப் பெற வேண்டியதுள்ளதோ அவருக்கு பேசுவதற்கான உரிமையும் இருக்கின்றது என்று கூறினார்கள். மேலும், எனக்கு அவர் தந்த விலங்கின் வயது என்னவோ அதே வயதிலுள்ள ஒரு விலங்கை அவருக்கு திரும்பக் கொடுத்து விடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதைக் கேட்ட நபித்தோழர்கள் அவர் கொடுத்த அந்த விலங்கை விட வயதில் கூடியிருக்கின்ற விலங்குதான் இருக்கின்றது என்று கூறினார்கள். இதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த விலங்கையே அவருக்குக் கொடுத்து விடுங்கள். எவர் தான் வாங்கிய கடனை நல்ல நிலையில் சிறந்த முறையில் திருப்பிக் கொடுக்கின்றாரோ அவர்தான் உங்களில் சிறந்தவர் என்று கூறினார்கள்.

ஆக, இந்த அழகிய முன்மாதிரியைப் பின்பற்றியவாறு கடனைத் திருப்பிக் கொடுப்பவர் அதனை சிறந்த முறையில் திருப்பிக் கொடுக்க வேண்டும். கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டால் அழகிய முறையில் கடன் கொடுத்தவரிடம் கால அவகாசம் கேட்க வேண்டும். அதற்கான ஜாமீனையும் கொடுக்க வேண்டும். பிறகு கடன் கொடுத்த அந்த மூஃமினுக்கும் அவருக்கும் கால அவகாசம் கொடுத்து அவரது ஜாமீனை ஏற்றுக் கொள்வது அவர் மீது கடமையாக இருக்கின்றது. இதன் மூலம் சமுதாயத்தின் குழப்பங்கள் முடிவுக்கு வரும். இரு தரப்பிலிருக்கின்ற வெறுப்புணர்வுகள் அகன்று விடும். இவையே சமுதாயத்தில் உள்ளவர்கள் தூய்மையடைவதற்கு இந்த மகத்தான தூதர் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த அழகிய முன்மாதிரியாகும். அவர்களது போதனைகளை கடைபிடித்து நடந்து கத் அப்லஹா மன்த ஸக்கா - எவர் தூய்மையடைந்து விட்டாரோ அவரே வெற்றி பெற்றவராவார் என்று யாரைப் பற்றி அல்லாஹ் கூறியுள்ளானோ அந்த தூய மக்களில் ஒருவராக நாம் ஆவதற்கான நல்வாய்ப்பை நம் அனைவருக்கும் வழங்குவானாக! அல்லாஹ் எப்போதும் நம்மை தனது தூய்மை பெற்ற அடியார்களில் ஒருவராக ஆக்குவானாக! ஆமீன்.

. …………

*KUTHBA*

**HAZRAT MIRZA MASROOR AHMAD**

***KALIFATHUL MASIH V***

***ON 25.01.08 AT LONDON***

***TRANSLATED BY : M .RAFEEQ AHMAD***

***PUBLISHED BY :*** **MAJLIS KHUDDAMUL AHMADIYYA, MELAPALAYAM,TAMILNAD** ***TELEFAX : 0462 – 2352456***